**குமரி அறிவியல் பேரவை சார்பில்**

**இளம் விஞ்ஞானிகள்**

நீரோடி முதல் வட்டக்கோட்டை வரை

**ஜனவரி 17,18-2009**

**கடலோர சூழியல் ஆய்வுப்பயணம்**

குமரி அறிவியல் பேரவை சார்பில் இளம் விஞ்ஞானிகளாக தேர்வு செய்யப்பட்ட மாணவ மாணவிகளுக்கு ஆய்வுப்பயிற்சிகள் வழங்கி வருகிறது. அதன் தொடர்ச்சியாக




'பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் மாற்றங்கள்' குறித்து குமரிமாவட்டக் கடற்கரைகளை ஆய்வு செய்வதற்காக நீரோடி முதல் வட்டக்கோட்டை வரை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இரண்டு நாள் நடந்த இந்த ஆய்வுப் பயணத்தில் நீர்,நிலம்,காற்று ,நெருப்பு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்கள் பெயர்களைக் கொண்டஇளம் விஞ்ஞானிகள் அணியினர், வழிகாட்டி ஆசிரியர்கள், கண்வீனர்கள், விஞ்ஞானிகள் , டாக்டர்கள் கலந்து கொண்டனர். இந்த பயணத்தினை மேற்கொள்ள மார்த்தாண்டம் பொறியியல் கல்லூரி வாகன உதவி வழங்கி உதவியிருந்தது.

மார்த்தாண்டம் பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடந்த தொடக்கவிழாவுக்கு பேராசிரியர்இரா.தியாகசுவாமி தலைமை வகித்தார். மாவட்ட வனஅலுவலர் சுந்தரராஜ் மரக்கன்றுகள் நட்டு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். மார்த்தாண்டம் பொறியியல் கல்லூரி துணைத்தலைவர் பேராசிரியர் ஜேம்ஸ்வில்சன் அனைவரையும் வரவேற்றார்.



ஆகாயம் அணியின் தலைவி இளம்விஞ்ஞானி ரேஷ்மாரதி தொடக்க நிகழ்ச்சியை



ஒருங்கிணைத்தார். குமரி அறிவியல் பேரவை அமைப்பாளர் முள்ளஞ்சேரி மு.வேலையன் அறிமுக உரை நிகழ்த்தினார். பொறியியல் கல்லூரி முதல்வர் பிரமில்குமார் ஆகாய அணியின் பருவநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு பிரசுரங்களை வெளியிட்டார். டாக்டர்.கிளாடிஸ்வில்சன் நீர்அணியின் விழிப்புணர்வு பிரசுரங்களை வெளியிட்டார். நிர்வாக அலுவலர் பசாலுதீன் காற்று அணியின் விழிப்புணர்வு பிரசுரங்களை வெளியிட்டார். அகில இந்திய மருத்துவ சங்கத்தின் தேசியச் செயலாளர் டாக்டர் ஜெயலால் நிலம் அணியின்

பிரசுரங்களை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். அகில இந்திய மருத்துவ சங்க தேசிய துணைத்தலைவர் டாக்டர் கே. விஜயகுமார் நெருப்பு அணியின் பிரசுரங்களை வெளியிட்டு சிறப்புரையாற்றினார். அணி உறுப்பினர் ரஜீஸ் நன்றி கூறினர்.

நீரோடியில் நடந்த வரவேற்பு நிகழ்ச்சியில் ஆசிரியை எசில்டா தலைமை தாங்கினார் கடல்வாழ் மக்கள் இன்றைய நிலை கடந்த காலநிலைகள் குறித்துப் பேசினார் 20 வருடங்களுக்கு முன்பு இருந்ததை விட கடற்கரை 75மீட்டர் அளவுக்கு மேல் பகுதிக்கு வந்துள்ளது எனவும் கடலோர சுகாதாரத்திற்கு மக்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருவது பற்றியும் விளக்கினார்.






வள்ளவிளையில் நடந்த வரவேற்பு நிகழ்ச்சியில் புனித யூதா நடுநிலைப்பள்ளி தலைமையாசிரியர் நிக்கல்சன் தலைமையில் நடந்த வரவேற்பு நிகழச்சியில் தலைமையாசிரியர் ஜாண்சன் , குமரிஅறிவியல்பரவை ஆலோசகர் ஜாண்ரபிகுமார் கருத்துரை வழங்கினார்கள். மீனவர்கள் சங்க பிரதிநிதியினர் பருவகால மீன் பிடித் தொழில்கள் பற்றி இளம் விஞ்ஞானிகளிடம் விளக்கினார். பாரம்பரிய முறையிலான மீன்பிடிக்கும் முறைகள் கையாளவும் கடலோரங்களில் சுத்தம் பேணவும், ஆலைக்கழிவுகள், ரசாயனக் கழிவுகள், சாக்கடைகள் கடல்வாழ் உயிரினங்களை அழியவிடாமல் பாதுகாக்வும் இளம் விஞ்ஞானிகள் பொது மக்களிடம் விளக்கினார். புத்தன்துறை, தூத்தூர் முதலிய பகுதிகளுக்கு விழிப்புணர்வு பிரசுரங்களை கொடுத்து விளக்கினார்கள்.



நித்திரவிளையில் பேட்ரியாட்ரிக்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப்பில் பொதுமக்கள் சார்பில் வரவேற்பு நிகழ்ச்சி ராஜேஸ் தலைமையில் நடைபெற்றது. ராபர்ட்குமார் கருத்துரை வழங்கினார்.ஐ.எஸ்.ஆர்.ஓ விஞ்ஞானி இங்கர்சால், புவி வளம் பேணுதலில் இளைஞர்கள் பங்கு குறித்து பேசினார். காற்று அணித்தலைவி ஜீகி தலைமையில் அடுத்த நிகழ்ச்சியை வழி நடத்தினார்.



பார்த்திபபுரம் பார்த்தசாரதி ஆலயவளாகத்தில் கலைச்சின்னங்கள் பற்றிய ஆய்வு நடத்தினர். அதில் கவிஞர் தங்கஅரசு தலைமையில் சிவசக்தி மெட்ரிப்பள்ளி சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

தேங்காய்ப்பட்டிணம் கழிமுகம் பகுதியில் ஏ.வி.எம் கால்வாய் நீர் தாமிரபரணி ஆற்றுத்தண்ணீர் கலக்கும் முகத்துவாரத்தில் மீன்கள் ஆற்று நீரில் சென்று குஞ்சு பொரிப்பது பற்றி விளக்கப்பட்டது. ஏவி.எம். கால்வாய் மாசு அடைவதை தடுக்கவும் படகு போக்குவரத்து நடத்தி சுற்றுலாவை மேம்படுத்துவது குறித்தும் நீர்வழி போக்குவரத்து ஏற்படுத்தவும் இளம் விஞ்ஞானி கருத்தாய்வு செய்தனர்.

இனையம் புத்தன்துறையில் நடந்த வரவேற்பு நிகழ்சசியில் புனிதஅந்தோணியர் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியை அருள் சகோதரி பெலிண்டா தலைமையில் ஆசிரியர்கள் மாணவிகள் கடலோரத்திற்கும் சென்று விழிப்புணர்வு பிரசுரங்கள் வெளியிட்டும் கடலோர துய்மையைப் பற்றியும் மீனவர்களிடம் விளக்கினர். சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.



கருங்கல் வந்த ஆய்வுக்குழுவினரை கிளாடிஸ்லில்லி தலைமையில் வரவேற்புக்குழுவினர் வரவேற்றனர். பேராசிரியர்ஜேம்ஸ்வில்சன் தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ஜோபிரகாஷ் விஞ்ஞானி இங்கர்சால் ஆகியோர் பொதுமக்கள் அடங்கிய கூட்ட்த்தில் 'பருவநிலை மாறற்றம் அதனால் ஏற்படும் விளைவுகள்' குறித்து உரைநிகழ்த்தினார்கள் விழிப்புணர்வு பிரசுரங்கள் வினியோகித்தனர்.





குளச்சலில் துறைமுகப் பகுதி கட்டுமானங்களை பார்வையிட்டனர். சுனாமியில் உயிரிழந்தவர்கள் நினைவிடத்திற்கு சென்று அஞ்சலி செலுத்தினர்.

கொட்டில்பாடு பகுதியில் ஏ.வி.எம். கால்வாய் நீர் பாரமரிப்பு பற்றி விளக்கம் அளித்தனர். தர ஆய்வுக்காக பாய்ந்து வரும் பகுதி நீர் , ஊற்று நீர் ,கடலில் கலக்கும் நேரத்தில் நீரின் தன்மை முதலியவைகளின் தரவேறுபாட்டை அறியும் வண்ணம் ஆய்வுக்காக நீர் சேமித்தனர்.

இளம் விஞ்ஞானிகள் பின்பு கூட்டுமங்கலம் விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் முதல்வர் ஸ்ரீகுமார் தலைமையில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. ஆய்வு குறித்து கலந்துரையாடி அறிக்கைகள் தயார் செய்தனர்.





சமூகத்தை நெறிப்படுத்துவது ஆன்மீகமா? ஆசிரியரா? அறிவியலா? அரசியலா? அறிவார்ந்தநூல்களா? என்னும் தலைப்பில் விவாத அரங்கம் நடைபெற்றது. இரவு விருந்திற்குப் பின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. காலையில் யோகா நிகழ்ச்சியை ஆசிரியர் சதீஸ்குமார், ஆசிரியர் ஜாண்வர்கீஸ் ஆகியோர் நடத்தினார்கள்.

இரண்டாவது நாள் ஆய்வுப்பயணம் தொடக்கவிழாவில் பள்ளியின் தாளாளர் மணிகண்டன் தொடங்கி வைத்தார். முதல்வர் ஸ்ரீகுமார் முன்னிலை வகித்தார். அணித்தலைவி பிரியங்கா வழி நடத்தினார். கடியப்பட்டிணம் பகுதியில் வள்ளியாறு கலக்கும் கழிமுகத்தில் ஆய்வு செய்யப்பட்டது.விஞ்ஞானி பென்சிகர் ராஜன் விளக்கமளித்தார். அரிய வகை





கனிமங்கள் சிர்கான்,மோசைட்,ருட்டாயில்,தோரியம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. பொதுமக்களுக்கு வழிப்புணர்வு பிரசாரங்கள் வழங்கப்பட்டது.

முட்டம் பகுதியில் தமிழ்நாடு டாக்டர்கள் சங்கதலைவர் டாக்டர். அருள்பிரகாஷ் நீரினால் பரவும் நோய்களுக்கான ஆய்வுகள் குறித்து விளக்கினார். ராஜாக்கமங்கலம் பகுதியில் நடந்த ஆய்வு நிகழ்ச்சியில் டாக்டர்.ஆறுமுகம் கலந்து கொண்டு விளக்கமளித்தார். பெரியகாடு பகுதியில் தூண்டில் வளைவு பற்றிய விளக்கங்களை விஞ்ஞானி பென்சிகர்ராஜன் விளக்கினார்.

சொத்தவிளை பகுதியில் ரகுவரன் தலைமையில் நடந்த வரவேற்பு விழாவின் போது இளம் விஞானி தர்ஷனி வழி நடத்தினார். இளம் விஞ்ஞானிகள் சுற்றுலா பயணிகளுக்கு விழிப்புணர்வு பிரசுரங்களை வழங்கினார். குழு ஆய்வு நிகழ்ச்சி



நடைபெற்றது. மணக்குடி கழிமுகம் பகுதியில் மங்காவிளை ராஜேந்திரன், ஆசிரியை மலர்விழி ஆகியோர் அலையாத்திக்காடுகள் குறித்து விளக்கமளித்தனர். சுனாமியின் போது



ஆற்றுப்பாலம் அடித்து செல்லப்பட்டது குறித்து விவாதிக்கப்பட்டது. வட்டக்கோட்டை பகுதியில் நடந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் ராஜதுரை தலைமையில் வரவேற்பு வழங்கப்பட்டது. கன்னியாகுமரி பகுதியில் கடலோரங்களில் குவிந்து கிடக்கும் பிளாஸ்டிக் கழிவுகள் குறித்து இளம்விஞ்ஞானிகள் கவலை தெரிவித்தனர். சுற்றுலா

பயணிகள் வருகையினால் வாகனங்கள் பொதுமக்கள் மூலம் அதிக வருவாய் கிடைக்கிறது. ஆனால் துய்மை பராமரிக்கப்படுவதில்லை என்ற கவலை தெரிவிக்கப்பட்டது.



விவேகானந்த கேந்திராவில் விரிவாக்க அலுவலர் சரஸ்வதி தலைமையில் நடந்த நிறைவிழாவில் அணியின் ஆய்வு அறிக்கைகளை வெளியிட்டனர். விஞ்ஞானி.பால்வண்ணன் சிறப்புரையாற்றினார்..





முள்ளஞ்சேரி.மு.வேலையன்,

அமைப்பாளர்,

குமரி அறிவியல் பேரவை,